மீஞ்சூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை. திருமதி.த.மகேஸ்வரி.,

ந.க.எண். : 160/2024/அ2, நாள். 30–01–2025.

பொருள் :– மனைப்பிரிவு – பேரூராட்சி நிர்வாகம் – திருவள்ளூர் மாவட்டம் – மீஞ்சூர் சிறப்புநிலை பேரூராட்சி – சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும மனை பிரிவு அங்கீகாரம் – மீஞ்சூர் வருவாய் கிராமம் சர்வே எண்.63/7B & 66/11A–ல் –ல் விஸ்தீரணம் 3000 சதுர மீட்டரில் பொதுச்சாலைக்காக ஒதுக்கப்பட்ட 471 ச.மீ இடமும், பொது பயன்பாட்டிற்காக 26 ச.மீ இடமும் பேரூராட்சிக்கு தானமாக அளிக்கப்பட்டது – மனைப்பிரிவு வரைபட அனுமதி வழங்கி உத்தரவிடுதல் – தொடர்பாக.

பார்வை :–
1. அரசாணை (நிலை) எண்.181 வீட்டு வசதி மற்றும் நகர மேம்பாட்டு (ருனு4(1) துறை நாள்.09.12.2020.
2. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் கடிதத்துடன் வரப்பெற்ற தானப்பத்திர ஆவண எண்.2988 நாள்.08.04.2024 மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி எண். Layout-1/0367/2023 நாள்– 30.04.2024 P.P.D L.O No.93/2024.
3. இவ்வலுவலக அலுவலக சாரா குறிப்பு கடித ந.க.எண் 405/2025/அ2 நாள்.10.10.2025.
4. திரு.டி.கண்ணன் எண்.87 பெருமாள் கோவில் தெரு, சின்ன சீமாவரம் மீஞ்சூர் என்பவரின் மனுநாள். 26.11.2025
5. மூன்றாம் தரப்பினரின் ஆய்வறிக்கை வரப்பெற்ற நாள்.31.12.2025

********

திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர் சிறப்புநிலை பேரூராட்சிக்குட்பட்ட மீஞ்சூர் வருவாய் கிராமம் சர்வே எண்.63/7B & 66/11A –ல் பூரா விஸ்தீரணம் 3000 சதுர மீட்டரில் 13 குடியிருப்பு மனைகள் 2 வணிக பயன்பாட்டு மனைகளாக உட்பிரிவு செய்து அங்கீகாரம் கோரும் முன்மொழிவு சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தினரால் மனைப்பிரிவு அங்கீகாரம் உரிய அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டு, பொதுச்சாலைகளுக்கு என 471 ச.மீ இடமும், பொது பயன்பாட்டிற்காக 26 ச.மீ இடமும் பேரூராட்சிக்கு தானமாக அளிக்கப்பட்டு, பார்வை 2–ல் காணும் சென்னை பெருநகர் வளர்ச்சி குழும உறுப்பினர் செயலர் கடிதத்தில் அனுமதி அளிக்கப்பட்டு பேரூராட்சிக்கு வரப்பெற்றுள்ளது.

மேற்படி, மனைபிரிவு வரைபட அனுமதி வழங்கும் பொருள் தொடர்பாக பேரூராட்சி மன்றத்தில் சாதாரணக் கூட்டத்தில் பொருள் வைக்கப்பட்டு தீர்மான எண்.538 நாள்.27.03.2025–ன்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மனுதாரரால் அபிவிருத்தி பணிகளான சாலை அமைத்தல், தெருவிளக்கு, மின்கம்பம் மற்றும் குடிநீர் பைப்லைன் விஸ்தரிப்பு பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது. அப்பணிகள் மூன்றாம் தரப்பினர் ஆய்வு செய்து அறிக்கை வரப்பட்டுள்ளது. எனவே, பேரூராட்சிக்கு செலுத்த வேண்டிய அபிவிருத்திக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது. எனவே கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு மனைப் பிரிவு வரைபட அனுமதி வழங்கி உத்தரவிடப்படுகிறது.

**நிபந்தனைகள்**

1) சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தினரால் ஒப்புதல் அளித்த மனையினை துணை மனைப்பிரிவு ( Sub Division ) செய்து விற்பனை செய்யக்கூடாது.

2) குடியிருப்புக்காக ஒதுக்கப்பட்ட மனையை வணிக உபயோகதிற்கு விற்பனை செய்யக் கூடாது.

3) மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்டதற்கு பேரூராட்சிக்கு செலுத்தப்பட்ட கட்டணங்கள் குறைவாக வசூலிக்கப்பட்டுள்ளதாக தணிக்கையில் தெரிவிக்கப்பட்டால் அதனை தாங்கள் செலுத்துவதற்கு பொறுப்பாவீர்கள்.

செயல் அலுவலர்
மீஞ்சூர் சிறப்புநிலை பேரூராட்சி
திருவள்ளூர் மாவட்டம்.

இணைப்பு. வரைபட நகல்

30.1.2026

பெறுநர் :–

திரு.டி.கண்ணன்
எண்.87,சின்ன சீமாவரம், சீமாவரம் தெற்கு,
மீஞ்சூர்–601 203.

நகல்:-

உறுப்பினர் செயலர்,
சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம்,
எண்.1, காந்தி இர்வின் சாலை, எழும்பூர்,
சென்னை–600008, அவர்களின் தகவலுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.